A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.

-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 39 / 2024**

திருமதி.G.சுந்தராம்பாள்,
க/பெ.கணேசன்,
கதவு எண்.4, குஞ்சாநாயக்கண்பாளையம்,
முசிறி அஞ்சல், திருச்சி மாவட்டம் – 621 211.

………மேல்முறையீட்டாளர்
(திருமதி.G.சுந்தராம்பாள்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&கா/ முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV முசிறி SS வளாகம், தாத்தயங்கார்பேட்டை ரோடு,
முசிறி, திருச்சி – 621 211.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&கா / முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV முசிறி SS வளாகம், தாத்தயங்கார்பேட்டை ரோடு,
முசிறி, திருச்சி – 621 211.

3) உதவி மின்பொறியாளர்/ இ&கா /டவுன் /முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.70, ஸ்ரீ கோகுலம் காம்ப்ளக்ஸ்,
துறையூர் பை பாஸ் ரோடு, முசிறி, திருச்சி – 621 211.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு P. ஆனந்த்குமார், செயற்பொறியாளர்/ இ&கா/ முசிறி
திரு R. சந்தானம், உதவி செயற்பொறியாளர்/ இ&கா / முசிறி
திரு B. சரவணன், உதவி மின்பொறியாளர்/ இ&கா /டவுன் /முசிறி)

**மனு பெறப்பட்ட நாள்: 14-05-2024**
**கேட்புரை நாள் : 18-07-2024**
**ஆணை நாள்: 24-07-2024**

14.05.2024 அன்று பெறப்பட்ட திருமதி.G.சுந்தராம்பாள், க/பெ.கணேசன், கதவு எண்.4, குஞ்சாநாயக்கண்பாளையம், முசிறி அஞ்சல், திருச்சி மாவட்டம் – 621 211 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 39/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 18.07.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது வீட்டின் மேல் செல்லும் உயரழுத்த மின் கம்பிகளை வேறு பாதையில் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது வீட்டின் மேல் செல்லும் உயரழுத்த மின் கம்பிகளை வேறு பாதையில் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மனுதாரரின் புகார் மனுவின் அடிப்படையில் மேற்கூறிய இடம் ஆய்வு செய்யப்பட்டு, DCW விண்ணப்பம் அளித்து மதிப்பீட்டு தொகையினை செலுத்தும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மனுதாரருக்கு 12.10.2023 நாளிட்ட கடித வாயிலாக பதில் அனுப்பப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் திருச்சி மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 01.12.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருச்சி மின் பகிர்மான வட்டம் 16.02.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 திருச்சி மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 16.02.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *திருச்சி, முசிறி கோட்டம், குஞ்சாநாயக்கன்பாளையம், கதவு எண். 4 என்ற முகவரியில் உள்ள தன்னுடைய வீட்டின் மேல் பகுதியில் செல்லும் உயரழுத்த மின் கம்பிகளை வேறு பாதையில் மாற்றி அமைக்குமாறு கோரிய இப்புகாரில் மனுதாரர் மன்ற விசாரணையில் பங்கேற்காததால் இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி இருதரப்பு ஆவணங்களையும், எதிர்மனுதாரரின் வாதங்களையும் ஆராய்ந்த மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மனுதாரருடைய வீட்டின் நடுவில் RSJ Rail Pole அமைத்து LT 3 Phase 4 Wire line சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செல்வதாகவும் அதனை மாற்றி அமைக்க DCW முறையில் விண்ணப்பம் அளித்து அதற்கான மதிப்பீட்டுத்தொகையை மனுதாரர் செலுத்தும் பட்சத்தில் வீட்டிற்கு நடுவில் அமைந்துள்ள RSJ Rail Pole யை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எதிர்மனுதாரர் கூற்று ஏற்புடையதே. இது தொடர்பாக, மனுதாரருடைய வீட்டின் புகைப்படமானது எதிர்மனுதாரரால் மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே வாரிய விதிகளின் படி மனுதாரருடைய வீட்டின் நடுவில் RSJ Rail Pole மற்றும் LT 3 Phase 4 Wire line DCW முறையில் விண்ணப்பம் அளித்து அதற்கான மதிப்பீட்டுத்தொகையை செலுத்தும் பட்சத்தில் மனுதாரருடைய வீட்டின் நடுவில் உள்ள மின் கம்பத்தை மாற்றி அமைக்குமாறு எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டு மன்றம் முடித்து வைக்கப்பட்டது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 18.07.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திருமதி.G.சுந்தராம்பாள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு P. ஆனந்த்குமார், செயற்பொறியாளர்/ இ&கா/ முசிறி, திரு R. சந்தானம், உதவி செயற்பொறியாளர்/ இ&கா / முசிறி மற்றும் திரு B. சரவணன்,

உதவி மின்பொறியாளர்/ இ&கா /டவுன் /முசிறி, திருச்சி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 திருச்சி, முசிறி கோட்டம், குஞ்சாநாயக்கன்பாளையம், கதவு எண் 4–இல் வசித்து வரும் மேல்முறையீட்டாளர் தன்னுடைய அனுமதி இல்லாமல் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் மின்வாரிய ஊழியர்கள் வீட்டின் மேல் பகுதியில் உயரழுத்த மின் கம்பிகளை இழுத்து விட்டதாகவும், இதனால் தற்போது மேற்படி வீட்டில் குடியிருக்க முடியாத சூழ்நிலை நிலவுவதாகவும், மழை நேரங்களில் நெருப்புப்பொறி பறப்பதால் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை நிலவுவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மழை இடி நேரங்களில் வீட்டில் இருக்கும் பொழுது இடி மின்னலில் கம்பி உரசி உயிர் போகும் நிலை ஏற்படுவதாகவும், தற்போது மின் வயர்கள் உள்ளதால் தனக்கு எந்தவிதமான துயரமும் இல்லை ஆனால் காற்றில் கம்பிகள் உரசி தீ ஏற்பட்டால் வீடும் போய் உயிர்போகும் நிலைஉள்ள நிலை தான் எனவும், எனவே தனது வீட்டின் மேல் செல்லும் உயாழுத்த மின் கம்பிகளை வேறு பாதையில் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மனுதாரர் 01.09.2023 அன்று தலைவர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்/ திருச்சி அவர்களிடம் அளிக்கப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் இடத்தை

26.09.2023 அன்று ஆய்வு செய்யப்பட்டதாகவும், விண்ணப்பதாரரின் RSJ Rail Pole அமைத்து LT–3 Phase 4 Wire Line சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் இருந்தே செல்கின்றதாகவும், விண்ணப்பதாரர் DCW விண்ணப்பம் அளித்து மதிப்பீட்டு தொகையினை செலுத்தும் பட்சத்தில் மேற்கண்ட மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மனுதாரருக்கு 12.10.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுதாரர் 01.12.2023 அன்று மீண்டும் தலைவர் மி.நு.கு.தீ.மன்றம் / திருச்சி அவர்களிடம் அளிக்கப்பட்ட புகார் மனு 01/2024 பதிவு செய்யப்பட்டு விசாரணை 15.02.2024 அன்று நடைபெறும் என தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், 03.02.2024 நாளிட்ட கடிதம் வாயிலாகவும் 12.02.2024 அன்று தொலைபேசி வாயிலாகவும் தகவல் அளிக்கப்பட்டதாகவும், 15.02.2024 அன்று திருச்சி மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் நடைபெற்ற மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற விசாரணைக்கு திருமதி.G.சுந்தராம்பாள் பங்கேற்கவில்லை எனவும், அவருக்கு பதிலாக அவருடைய கணவர் திரு.கணேசன் கலந்துகொண்டு எந்தவித அங்கீகார கடிதமும் மன்றத்தில் சமர்பிக்கவில்லை எனவும், எனவே மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற விதிகளின்படி மனுதாரர் சார்பாக திரு.கணேசன் அவர்கள் விசாரணையில் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 தலைவர் மி.நு,கு.தீ.மன்றம் / திருச்சி மன்ற விசாரணையில் புகார் மனுதாரர் கலந்துகொள்ளாததால் இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையிலும் எதிர்மனுதாரரின் வாதங்களையும் ஆராய்ந்து மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றதலைவர் மற்றும் உறுப்பினர்கள் மனுதாரருடைய RSJ Rail Pole மற்றும் LT–3 Phase 4 Wire Line சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் இருந்தே செல்வதாகவும் அதனை மாற்றி அமைக்க DCW விண்ணப்பம் அளித்து மதிப்பீட்டு தொகையினை மனுதாரர் செலுத்தும் பட்சத்தில் வீட்டின் ஒரு பகுதியில் உள்ள RSJ Rail Pole–யை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எதிர்மனுதாரரின் கூற்று ஏற்புடையதே. எனவே வாரிய விதிகளின்படி மனுதாரருடைய வீட்டின் ஒரு பகுதியில் உள்ள RSJ Rail Pole மற்றும் LT–3 Phase 4 Wire Line–யை மாற்றி அமைக்க DCW விண்ணப்பம் அளித்து மதிப்பீடு தொகையினை மனுதாரர் செலுத்தும் பட்சத்தில் வீட்டின் ஒரு பகுதியில் உள்ள RSJ Rail

Pole in LT–3 Phase 4 Wire Line–யை மாற்றி அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இவ்வழக்கில் மனுதாரர் கோருவதுபோல் வாரியசெலவில் மனுதாரருடைய நிலத்தில் உள்ள வீட்டின் மேலே செல்லும் மின்பாதையையும் மின்கம்பத்தினையும் மாற்றி அமைக்க வாரிய விதிகளின்படி சாத்திய கூறுகள் இல்லை எனவும் விண்ணப்பதாரர் DCW விண்ணப்பம் அளித்து மதிப்பீடு தொகையினை செலுத்தும் பட்சத்தில் மேற்கண்ட மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருச்சி, முசிறி கோட்டம், குஞ்சாநாயக்கன்பாளையம், கதவு எண் 4–இல் வசித்து வருவதாகவும், தன்னுடைய அனுமதி இல்லாமல் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் மின்வாரிய ஊழியர்கள் வீட்டின் மேல் பகுதியில் உயரழுத்த மின் கம்பிகளை இழுத்து விட்டதாகவும், இதனால் தற்போது மேற்படி வீட்டில் குடியிருக்க முடியாத சூழ்நிலை நிலவுவதாகவும், மழை நேரங்களில் நெருப்புப்பொறி பறப்பதால் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை நிலவுவதாகவும் தெரிவித்துள்ளார்.

7.3 இடி மழை நேரங்களில் வீட்டில் இருக்கும் பொழுது மின்கம்பி உரசி உயிர் போகும் நிலை ஏற்படுவதாகவும், தற்போது மின் வயர்கள் உள்ளதால் தனக்கு எந்தவிதமான துயரமும் இல்லை எனவும், ஆனால் காற்றில் கம்பிகள் உரசி தீ ஏற்பட்டால் வீடும் போய் உயிர்போகும் நிலை உள்ளதாகவும், எனவே தனது வீட்டின் மேல் செல்லும் உயரழுத்த மின் கம்பிகளை வேறு பாதையில் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு அளித்த புகார் மனுவின் அடிப்படையில் இடத்தை ஆய்வு செய்ததாகவும், விண்ணப்பதாரரின் வீட்டின் ஒரு பகுதியில் உள்ள RSJ Rail Pole

அமைத்து LT-3 Phase 4 Wire Line சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் இருந்தே செல்கின்றதாகவும், அந்த மின்பாதையில் முன்னதாக 02.02.1977-இல் 292-017-51 என்ற மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், எனவே விண்ணப்பதாரர் DCW விண்ணப்பம் அளித்து மதிப்பீட்டு தொகையினை செலுத்தும் பட்சத்தில் மேற்கண்ட மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மனுதாரருக்கு கடிதம் வாயிலாக பதில் அனுப்பப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 இவ்வழக்கில் மனுதாரர் கோருவதுபோல் வாரியசெலவில் மனுதாரருடைய நிலத்தில் உள்ள வீட்டின் மேலே செல்லும் மின்பாதையையும் மின்கம்பத்தினையும் மாற்றி அமைக்க வாரிய விதிகளின்படி சாத்திய கூறுகள் இல்லை எனவும் விண்ணப்பதாரர் DCW விண்ணப்பம் அளித்து மதிப்பீடு தொகையினை செலுத்தும் பட்சத்தில் மேற்கண்ட மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேல்முறையீட்டாளர் கேட்புரையின் போது அந்த மின்பாதை பல காலமாகவே தன்னுடைய வீட்டின் ஓரமாக சென்று கொண்டிருந்ததாகவும், சமீப காலத்திலேயே தான் வீட்டில் இல்லாத நேரத்தில் தன்னுடைய அனுமதியின்றி எதிர்மனுதாரர் அம்மின்பாதையை தன்னுடைய வீட்டின் குறுக்கே செல்லுமாறு மாற்றி அமைத்துவிட்டதாகவும் தெரிவித்தார். எதிர்மனுதாரர் அதற்கு பதில் அளிக்கையில், மேல்முறையீட்டாளரின் வீட்டின் அருகில் இருந்த மற்றொருவர் மதிப்பீட்டு கட்டணம் செலுத்தியதன் பேரில் பக்கத்து வீட்டின் மின்பாதை மட்டுமே மாற்றியமைக்கப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளரின் மின் பாதையில் எந்தவொரு மாற்றமும் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

7.7 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் நுகர்வோர் பேரேட்டினை ஆராயும் போது அவரது மின் இணைப்பு எண் 292-017-63 ஆனது 08.10.1990-இல் வழங்கப்பட்டிருப்பதும், அவருடைய வீடு மற்றும் மின் இணைப்பு நிறுவப்படுவதற்கு முன்பே அந்த மின்பாதையில் 02.02.1977-இல் 292-017-51 என்ற மின் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதும் தெரியவருகிறது. எனவே, இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு வழங்கப்படுவதற்கு முன்பே மின்பாதை அமைக்கப்பட்டது உறுதியாகிறது.

7.8 மின்பாதை நிறுவிய பின்பு தான் மேல்முறையீட்டாளர் தன்னுடைய இடத்தில் வீடு கட்டி மின் இணைப்பு பெற்றதாக ஒப்புக் கொண்டார். ஆகவே, தற்சமயம் உள்ள மின்பாதை அவர் மின் இணைப்பு பெற்ற 1990 முன்பே அதாவது 1977–இல் 13 வருடங்களுக்கு முன்பே நிறுவப்பட்டது தெரியவருகிறது. இந்நிலையில் மின்பாதை அமைத்த பின்பு கட்டிய கட்டிடத்திற்கு மேல் செல்லும் மின்பாதையை உரிமதாரரின் செலவில் மாற்ற கோரிக்கை எழுப்பிய நிலையில் அந்த மின்பாதைக்கும் கட்டிடத்திற்கும் தற்சமயம் உள்ள இடைவெளி 2.5 meters என எதிர்மனுதாரர் தெரிவித்த நிலையில் அது பாதுகாப்பு நிலைபாட்டில் இருக்கிறதா என்பதை அறிய CEA (measure relating to safety and electric supply) Regulations 2023 இன் 62 வது விதி, Chapter VII ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***62. Clearance from buildings of lines of voltage and service lines not exceeding 650 V. –***
> *(1) An overhead line shall not cross over an existing building as far as possible and no building shall be constructed under an existing overhead line.*
> *(2) Where an overhead line of voltage not exceeding 650 V passes above or adjacent to or terminates on any building, the following minimum clearances from any accessible point, on the basis of maximum sag, shall be observed, namely: –*
> *(i) for any flat roof, open balcony, varandah roof and lean-to-roof, –*
> *(a) when the line passes above the building, a vertical clearance of 2.5 metre from the highest point; and*
> *(b) when the line passes adjacent to the building, a horizontal clearance of 1.2 metre from the nearest point;*
> *(ii) for pitched roof, –*
> *(a) when the line passes above the building, a vertical clearance of 2.5 metre immediately under the line; and*
> *(b) when the line passes adjacent to the building, a horizontal clearance of 1.2 metre.*
> *(3) Any conductor so situated as to have a clearance less than that specified in sub-regulation (2) shall be replaced with Aerial Bunched Cable and to be attached at suitable intervals to a bare earthed bearer wire having a breaking strength of not less than 350 kgf.*
> *(4) The horizontal clearance shall be measured when the line is at a maximum deflection from the vertical due to wind pressure.*
> *(5) The vertical and horizontal clearances shall be measured as per illustration provided in Schedule VIII C.*
> *Explanation. – For the purposes of this regulation, the expression "building" shall be deemed to include any structure, whether permanent or temporary."*

7.9 எதிர்மனுதாரர் அளித்த ஆவணங்களின் வாயிலாக மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் உள்ள இடைவெளி 2.5 Mtrs. என இருப்பதும், இது பாதுகாப்பு சேமவிதிகளில் கூறப்பட்டப்படி இருப்பதும் தெரியவருகிறது.

7.10 மேல்முறையீட்டாளர் இடமாற்றம் கோரும் மின்கம்பம் மற்றும் மின்பாதையானது இன்றைய வருடமான 2024–இன் அடிப்படையில் ஆராய்ந்தால் 47 வருடங்களுக்கு முன்பு நிறுவப்பட்ட பாதையாக தெரியவருகிறது. மேலும் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு பெற்ற 1990 வது வருடத்தின் அடிப்படையில் பார்த்தால் 1977–இல் நிறுவப்பட்ட மின்பாதையானது 17 வருடங்களுக்கு முன்பு நிறுவப்பட்ட மின்பாதையாக தெரிகிறது. தற்சமயம் வரை உரிய பாதுகாப்பு இடைவெளியுடன் இருப்பது அறியவருகிறது. எனவே, மேல்முறையீட்டாளரின் வீடு பிற்பாடு கட்டப்பட்டதாக தெரியவருகிறது. அதுவும் தற்சமயம் வரை அந்த மின்பாதையானது உரிய பாதுகாப்பு இடைவெளியுடன் இருக்கும் நிலையில் மேல்முறையீட்டாளர் மின்பாதை மாற்ற விரும்பும் பட்சத்தில் தமிழ்நாடு மின் வழங்கல் விதிகளின் விதி எண்.5(6)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"5. பல்வகைக் கட்டணங்கள்***
***xxx***
***xxx***

***6. மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
*(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.11 மேற்கண்ட விதி 5(6)ஐ கூர்ந்து பார்க்கும்பொழுது மின் இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும் எனவும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே செலுத்திவிட வேண்டும் எனவும், மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டுமெனவும், அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப்பணி தொடங்கப்படும் எனவும் அறியப்படுகிறது.

7.12 ஆகவே, மேல்முறையீட்டாளர் உரிய விண்ணப்பம் அளித்து பங்களிப்பு வைப்புநிதி திட்டத்தின் கீழ் கட்டணம் செலுத்த முன்வரும் நிலையில் தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளர் பாதுகாப்புடன் நிறுவப்பட்ட மின்பாதையை மாற்று இடத்தில் உரிமதாரர் செலவில் இடமாற்றம் செய்யக் கோரும் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை. மேலும், மேல்முறையீட்டாளர் அம்மின்பாதையை மாற்ற விரும்பினால் தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் முடிவெடுக்க எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 39/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

(ந. கண்ணன்)
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1) திருமதி.G.சுந்தராம்பாள்,
க/பெ.கணேசன்,
கதவு எண்.4, குஞ்சாநாயக்கண்பாளையம்,
முசிறி அஞ்சல், திருச்சி மாவட்டம் – 621 211.

2) செயற்பொறியாளர்/ இ&கா/ முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV முசிறி SS வளாகம், தாத்தயங்கார்பேட்டை ரோடு,
முசிறி, திருச்சி – 621 211.

3) உதவி செயற்பொறியாளர்/ இ&கா / முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV முசிறி SS வளாகம், தாத்தயங்கார்பேட்டை ரோடு,
முசிறி, திருச்சி – 621 211.

4) உதவி மின்பொறியாளர்/ இ&கா /டவுன் /முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.70, ஸ்ரீ கோகுலம் காம்ப்ளக்ஸ்,
துறையூர் பை பாஸ் ரோடு, முசிறி, திருச்சி – 621 211.

5) மேற்பார்வை பொறியாளர், – By Email
**திருச்சி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம் மெயின் ரோடு, திருச்சி – **620 020.**

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7) செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8) உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.